# இந்துசாதனம்.

DUPLICATE

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஷ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, காற்கலம் | ரூ. 3-15 |
| ,, ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ. } யாழ்ப்பாணம்:—குரோதனஷ தைமீ கடு (1926 ஜனவரி 28)வியாழக்கிழமை. { இலக்கம்—நஅ


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிறு னுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது னூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

## இந்தியா ஆயுர்வேத வித்தியாபீட (சர்வகலாசாலை) "விசாறட" எனும் வயித்திய பரீட்சை.

இப்பரீட்சை 1926-ம் வருஷம் பங்குனி மாசம் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத கல்லூரியில் நடைபெறும்.

இ "விசாரடை" என்னும் பரீட்சை எடுக்க விரும்பும் வயித்தியர்களும், மாணக்கர்களும் தமது மனுப்பத்திரங்களைப் பின்வரும் விலாசத்திற்கு இவ்வருஷம் மாசிமீ 20-ம் திகதி (20-2-26) -க்குமுன் அனுப்பிவைக்கவேண்டும்.

ஜே. வஸ்தியாம்பிள்ளை,
தலைமை ஆசிரியர்.
இலங்கா ஆயுர்வேத கல்லூரி,
(Mis 799) யாழ்ப்பாணம்.

## M. Sultan Abdul Kader.
SULTANIA MEDICAL HALL.
PORTO-NOVO (S ARCOT Dist.)

## பர்மாகவர்னரின் டாக்டர் சர்ட்டிபிகேட்.

நான் இரங்கூன் பஞ்சசக்தி கம்பெனியிலிருந்து பரங்கிப்பேட்டை சுலத்தானியா வைத்தியசாலை சொந்தக்காரரால் செய்யப்பட்ட சிட்டுக்குருவிச்சத்தின் லேகியம் வரப்பெற்று அருந்திப்பார்த்தேன். அது தேக வலுவையும் வீரியவிர்த்தியையும் கொடுக்கிறது. இன்னம் இந்த லேகியத்தில் அநேககுணமிருக்கிறது.

இப்படிக்கு,
டாக்டர். சையத்மேஜர் அலிகான் சாகிப்.
கவர்னர் மாளிகை, பர்மா.

துரைகளே! முழுவதும் வாசித்துக் கவனியுங்கள்!!!

இழந்துபோனபலத்தையும். தளர்ந்துபோன நரம்புகளையும் சரிப்படுத்தி ஒரேவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு பலத்தைக் கொடுக்கும் மெடல்பெற்ற

## "சிட்டுக்குருவிச்சத்தின் லேகியம்".



இந்தச் சிட்டுக்குருவிச்சத்தின் லேகியத்தைப்போல் மற்றவைத்தியர்கள் செய்துகொடுத்தால் 2,000 ரூபாய் இனும்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! அருமையும், பெருமையும் கீர்த்தியும் பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மண வாழ்க்கையில் அகானந்த இன்பத்தை யடைவார்கள். 'ஆஹா! குணத்தால் சிறந்ததுதான், என்று இதனைப் பன்முறையும் புகழ்வார்கள்.

லேகியத்தின் குணமாவன:—வாத பித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் ரத்தக்குறைவு, பலஹீனம், அஸ்தி, வெட்டைச்சூடு, வீரியம் நீற்று தூக்கத்தில் அதிகமாய் வெளிப்படல், மணவாழ்க்கையிற் சீக்கிரம் [illegible]விடுதல், (Spermatoreah) வீரிய நஷ்டம், நரம்புத்தளர்ச்சி, [illegible], [illegible], பித்தாதிக்க உஷ்ணவாய்வு, கிருமிரோகம், தர்சீர் வியாதிகள், தேகத்[illegible]டித்திரியும் பலவித வாய்வுரோகம், பார்சவாய்வு, நெஞ்சுவலி, (Nervous Diseases), [illegible]வாதம், கைகா லசதி, மயக்கம், மறதி, ஆண் தன்மை நாளுக்கு நாள் குறைதல் முதலி[illegible] நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தைச்சமனப்படுத்தி இரத்தத்தை விருத்திசெய்து நரம்[பி]னை வலுப்படுத்தி நீற்றுப்போன வீரியத்தைக் கெட்டிப்படுத்தி ஆண் தத்துவத்தைவிர்த்தி செய்து புத்திசாதுர்யத்தைக் கொடுக்கும். மெடல் பெற்ற சிட்டுக்குருவி சத்தின் லேகியம் சாப்பிட்டு குணமில்லை யென்று சத்தியமாய்ச்சொன்னுல் அவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்[து] ரூபாய் 1,000 இனும் கொடுக்கப்படும். ஓர் தடவை பரீட்சை செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| 40-நாளைக்குச் சாப்பிடும் | 80 வேளை | 16 பலம் டப்பி விலை ரூபா ... | 10—0—0 |
| 20-நாளைக்குச் சாப்பிடும் | 40 " | 8 பலம் டப்பி விலை ரூபா ... | 6—8—0 |
| 12-நாளைக்குச் சாப்பிடும் | 24 " | 5 பலம் டப்பி விலை ரூபா ... | 3—8—0 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ பினங்கு, சிங்கப்பூர், இன்னான், குவாலாலம்பூர், பேரு முதலிய பிறதேச வாசிகள் மருந்தின் கிரயமும் தபால் சார்ஜ் ரூபா 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவாய் எழுதவும்.

லேகியத்துக்கு ஆர்டர் செய்யும்போது இப்பத்திரிகையைக் குறிப்பிட்டு எழுதவும்.

☞ எமது விலாசம்:—
எம். சுல்தான் அப்துல்காதிர்
சுல்தானியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னுற்காடு ஜில்லா.
(Y 48.)

☞ சிலோனுக்கு சோல் ஏசண்டு:—
T. D. மதுரைநாயகம் அன்கோ.,
ஞானசுந்தா வைத்தியசாலை,
நெ. 81 செட்டித்தெரு, கொழும்பு.

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ. ப. சீ. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்: வேணுகோபால், சேலம்.
(H. 32.)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்ரர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்ரர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினுல் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரிட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ருபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறும்பாலது. (Y. 47.)

## தமிழ் வாசிப்போர் இங்கிலீஷ் பேசுதற்குக் கற்கும்வழி அல்லது ஆங்கிலேய ஆசிரியன்.



அன்பர்காள்!

நமது இந்தியா வாசிகள் இங்கிலீஷ் வாசித்து உத்தியோகஞ் செய்வதென்றால் வெகுகாலமாகிறது. அன்றியும், ஒவ்வொரு ஆபீஸில் துரைகள் அவசரமிதந்தமாய் இங்கிலீஷ் பேசினுல் அதனுடைய விபரந் தெரியாமல் தவிக்க, உடனே டிஸ்மிஸ் செய்துவிடுவதினுல் ஜீவனமில்லாமல் கஷ்டப்படும் நண்பர்களுக்கு வெகு சுலபமாக இங்கிலீஷ்பேசுவதற்காக யாங்கள் அநேகமுயற்சியெடுத்து முக்கிய பதங்களும் பேசுவதற்குரிய வாக்கியங்களும்தமிழ் எழுத்திலும்இங்கிலீஷ் எழுத்திலும் அமைத்து இன்னின்ன வாக்கியத்திற்கு இன்ன அர்த்தமென்று இங்கிலீஷுக்குரிய தமிழ் வாக்கியம் வரைந்து அச்சிட்டிருக்கின்றோம். இதனை வாங்கி வாசிக்கும்நண்பர்களுக்கு1 மாதத்திற்குள் இங்கிலீஷின் மர்ம ரகஸ்ய வார்த்தைகளையெல்லாம் தெளிவாய்க் கற்றுக்கொண்டு துரைகளிடத்திற் தெளிவாய்ப் பேசுதல் முடியும்.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—8—0
தபாற் செலவு அணு 4.
2-புத்தகம்வாங்கினுல் வி. பி. சார்ஜ் இனும்
4-புத்தகம் வாங்கினுல் 1-புத்தகம் இனும்.

விலாசம்:—
டி. ஆனந்தாசிரியபுத்தகசாலை,
நெ. 5-34,
நவீனியப்ப நாய்க்கன் தெரு,
(M. 39.) பார்க் டவுன் போஸ்டு, மதறுஸ்

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சகலமுடனுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால் ரூத்தலுக்கு ரூபா ரு தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாதினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்ற,
மட்டுக்களப்பு,
(M. 36.) சிலோன்.

## மகாராணி "பான்ட்" வாத்தியம்.

கொழும்பிலும் கண்டியிலும் ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

அதிக திறமைவாய்ந்த வாத்தியகாரரைக் கொண்ட கூட்டமாகும். இக்காலத்துக்குத் தக்க அமைவானது. எல்லாவகையான விசேஷ காலங்களுக்கும் சேவித்தற்குச் சித்தமாயிருக்கின்றார்கள். நியாயமான சம்பளத்தோடு ஒழுங்குபண்ணலாகும்.

கொழும்பு விலாசம்: மின்னிஹாஹா,
மாளிகாக்கந்தைத்தெரு.
(Minnehaba, Reservoir Road,
COLOMBO.

கண்டி விலாசம்: இராணி விடுதிச்சாலை
Queen's Hotel,
(M. 43). KANDY.

## ☞ "சேலம் பனியன்கள்."

உறுதியானது; விலை சரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது.
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்,
(H. 40) S இந்தியா.

## இனும்! காலண்டர் இனும்!!

1926ஷ —— 1926ஷ

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், நெ 1-ம், நெ 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசுகுத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச்சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சீமை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் 1926-ம் ஆு கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

1926-ம் ஆு காலண்டர்.

டீ. பிளே செட்டி அன கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம், தென் இந்தியா.
(H. 39.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: குரோதன௵ தைமீ 28உ வியாழக்கிழமை.


## இன்னும் மூன்று தவறணைகள்தான் தொலையவேண்டும்.

கடவுள் அருளாலும் மதுவிலக்குச் சங்கத்தாரின் இடையரு முயற்சியினாலும், யாழ்ப்பாணத்துள்ள சனங்களின் அபிமானத்தினாலும் நெடுங்காலமாக இந்த யாழ்ப்பாணத்திலே கொலை, களவு, காமம், பொய், தாரித்திரியம் முதலாகிய தீமைகட்கெல்லாம் காரணமாக விருந்த கள் சாராயம் அந்நியநாட்டுக் குடிவகை என்னுமிவைகளெல்லாம் நீங்க, நமது நாடு நன்னிலையடையுங் காலம் வந்துவிட்டது. யாழ்ப்பாணத்திலே இன்னும், இம்முறை அகற்றப்படவேண்டிய சாராயத் தவறணை ஒன்றும் கள்ளுத் தவறணைகள் இரண்டுமே எஞ்சியிருக்கின்றன. ஆற்றைத் தாண்டிவிட்டுக் கால்வாய் தாண்ட யோசிக்கவொண்ணாது. இந்த மூன்று தவறணைகளையும் அகற்றிவிட்டால் நமது யாழ்ப்பாணம் புண்ணியபூமி, தேவபூமியென்று எவராலும் போற்றத்தக்கதான நிலைமையை அடையும். இன்னும் ஏதுந் தவறணைகள் எஞ்சியிருப்பின், உணவோடும் உணவின்றியும் மதுபானத்தைத் தரும் விடுதிகளிருப்பின் அவையெல்லாம் காருண்ணியம் பொருந்திய எங்கள் அரசினரால அகற்றப்படுமெனக் காத்திருத்தல் ஆகும். யாம் முன்னொரு சந்தர்ப்பத்திற் கூறியவாறு ஏனைய தவறணைகள் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு இந்த மூன்று தவறணைகளையும தவிர்க்காது விடுதல், வீட்டிற் பிடித்த பெருநெருப்பை அவித்துவிட்டு ஒரு சிறு நெருப்புக்கொள்ளியைமாத்திரம் அலட்சியமாக அவியாது விடுதல்போலாம்.

ஆதலினாலே, (1) நல்லூர்ச் சாராயத்தவறணை (2) சுண்டிக்குளிக் கள்ளுத்தவறணை (3) திருநெல்வேலிக் கள்ளுத்தவறணை என்னும் இந்த மூன்று தவறணைகளையும் நீக்குதற்குச் சனசம்மதம் பெறுந் தினம் வருகிற சனிக்கிழமை (30-1-26) யாகும். சம்மதம் பெறுதற்காகிய ஸ்தானம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை, கோப்பாய் அரசினர் கல்லூரி என்னும் இவைகளாகும். சம்மதஞ் சொல்லவேண்டியவர்கள் பட்டினபரிபாலனசங்க ஐந்தாம் வட்டாரத்திலும் நல்லூர் திருநெல்வேலி கள்ளியங்காடு இருபாலை கோப்பாய் என்னும் பிரிவுகளிலும் வசிக்குந் தலைவரிப்பணங் கொடுக்கும் அபிமானிகளாவர்.

இவர்களெல்லாரும் சனிக்கிழமை அதிகாலையில் தங்கள் தங்களுக்கெனக் குறித்திருக்கும் சம்மதஞ் சொல்லும் ஸ்தானத்திற்குத் தவறாது போய், "கள்ளு வேண்டாம் சாராயம் வேண்டாம்" என்று மனப்பூர்வமாகச் சொல்லிவிட்டு மீண்டு வருதல்வேண்டும். பெண்பாலார் தங்கள் வீடுதோறுமுள்ள சம்மதஞ் சொல்லும் உரிமைபூண்ட ஆடவர்களை ஞாபகப்படுத்தி, சம்மதஞ் சொல்லுமிடத்திற்குப் போய் மதுபானம் வேண்டாமென்று சொல்லிவிட்டு வரும்படி தூண்டிவிடுதல்வேண்டும். இந்தப் புண்ணிய கருமத்திற்கு இடையூறாக நிற்பார் எவருமில்லை. யாரும் இடையூறாக நிற்பரேல், அவர்களையிட்டு மதுவிலக்கு முயற்சி செய்யும் அபிமானிகளும் மற்றையோரும் மனஸ்தாபப்படவொண்ணாது. ஏனென்றால் அவர்கள் செய்யும் மாறான வேலை மதுவிலக்கில் ஈடுபட்டுழைக்கும் அபிமானிகட்கு இவ்விஷயத்திற் பெரும் ஊக்கத்தைத் தருதற்கு ஏதுவாகும்.

இங்குள்ள மதுக்கடைகளை யெல்லாம் அறவே யொழித்துவிடுவதனால், மரமேறிகளுக்கு வேலையில்லையென்றும், மதுபரிபாலனப்பகுதி உத்தியோகத்தர்கட்கு வேலையில்லையெனவும் நினைப்பது தவறாகும். எவருக்காயினும் வேலையில்லையென்று தீமையை வளரவிடுதல் முடியாது. சிலருக்கு வேலைகொடுப்பதற்காக ஊரவர்கள் குடித்துக் கெட்டுப்போதல் இயலாது. மரமேறிகளென்றிருப்பவர்களுட் பள்ளரெனச் சொல்லப்படுவோர் முற்காலத்தில் வயல்வேலை செய்த மள்ளராவர். நழுவரெனப்படுவோர் தமிழரசர் காலத்திலே போர்வீரராக விருந்தவர்களெனச் சொல்வர். இந்த இருபாலாரும், இத்தீத்தொழிலை விடுத்து நிலவளம் நீர்வளம் நிறைந்த வன்னிக் காட்டைத் திருத்தி வேளாண்மைசெய்தலாகும். மதுபரிபாலனப் பகுதியாருக்கும் அரசினர் வன்னியிலே கமத்தொழிலை மேற்பார்த்து நடத்தும் உத்தியோகத்தைக் கொடுத்தல் வேண்டும். உழுவார்க்கொருபுலமும் தொழுவார்க்கொரு தெய்வமுஞ் சிட்டாமற் போகா. கள்ளுக்குப் பதிலாக நெல்லு எங்கள் நாட்டிற்கு வருமாயின் பஞ்சம் எங்களை எட்டிப்பார்க்க முடியுமா? இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து நமது அபிமானிகள் மதுபானத்தை அறவே அகற்றி இனிது வாழ்வார்களாக.

## கதிர்காம வேலவர்.

[இவ்வியாசம் சேர். பொ. அருணாசலந்துரை அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது. "றோயல் ஏசியாற்றிக்" சங்கத்தாரின் இலங்கைக் கிளைச் சங்கத்தில் உபதேசாதிபதியவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் டீ பொ. அருணாசலந்துரையவர்களின் குமாரர் கௌரவ ஸ்ரீ மகாதேவன்அவர்களால்வாசிக்கப்பட்டது. இந்துக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ அ க இளையதம்பிஅவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.]

(முற்றொடர்)

துட்ட ஜம்னு என்னும் அரசன் கதிர்காமக் கடவுளின் அருள் கொண்டு, அக்காலத்தில் அநுராதபுரியில் அரசு செய்து கொண்டிருந்த எல்லாளன் என்னும் தமிழரசனை எதிர்த்துச் சென்று கடும்போர் புரிந்து அவனைக் கொன்று தன் முன்னோர் வழிவந்த சிங்காசனத்தைக் கவர்ந்து அரசனாகிய பெருமகிழ்ச்சிக்கறிகுறியாக, கதிர்காம ஆலயத்தை 1-ம் நூற்றாண்டிற் கட்டுவித்துச் சர்வமானியம் ஏற்படுத்தினான் என்பது கர்ணபரம்பரை. துட்ட ஜம்னுவின் மூதாதையும் தேவநம்பிய திஸையின் சகோதரனுமாகிய மகாநாகன் தென்மாகாணத்திலுள்ள மகாகாம என்னுமிடத்தில் ஒதுங்கியிருந்து அங்கே ஓர் ராசபரம்பரையை ஸ்தாபித்தான். அநுராதபுரியில் ஏறக்குறைய 78-வருடகாலம் தமிழர் அரசு செலுத்தினர். அவர்களுள் எல்லாளன் என்பவனே (205-161) மிகச்சிறந்தவன். எல்லாளனிலிருந்து தேசத்தை மீட்டுக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் துட்டஜமனுவுக்கு உதித்தது. உதித்த நாள் முதல் இராப்பகல் இதே சிந்தனையாயிருந்தனன். அப்பொழுது கதிர்காமக்கடவுளின் அனுக்கிரகத்தைப் பெற்றாலேயன்றித் தந்தை கட்டளைக்கு மாறாய் அவ்விஷயத்திற் பிரவேசிக்க லாகாதென ஓர் கனவுகண்டனன். உடனே அவன் கதிர்காமத்துக்கு யாத்திரை செய்து கதிரைத்தீரத்திலிருந்து தெய்வம் துணை செய்ய வேண்டுமென்று கடுந் தவஞ் செய்தனன். அப்பொழுது ஓர் முனிவர் அவன்முன் திடீரெனத் தோன்ற அரசன் பயத்தினால் மூர்ச்சை யானான். மூர்ச்சை தெளிந்தவுடனே கதிர்காமவேலர் தன்முன் [illegible] அவரைப் போற்றி ஆயுதங்களும் யுத்தத்தில் வெற்றியடைதற்கு வரமும் [illegible] யுத்தமுனை யினின்று நீங்கியவுடன் [illegible] காமத்தைக் கட்டிச் சர்வமானியம் [illegible] வேனென்று சங்கற்பஞ் செய்து கொண்டு யுத்தசன்னத்தனாய்ப் புறப்பட்டு எல்லாளனைத் தோல்வியடைவித்து அவனைக் கொன்று சிங்காசனத்தைக் கைப்பற்றினான்.

துட்டஜம்னு 'கதிர்காமசுவாமி இடம் வரம்பெற்று யுத்தம் வென்ற சம்பவம், புத்தமதத்தை நிலைநிறுத்திய வீரனென்று துட்டஜமனுவைப் புகழ்ந்துரைக்கும் புத்த இதிகாசமாகிய மகா வம்சத்தில் குறிக்கப்பட்டிராமை நூதனமன்று. மெண்டிஸ்குணசேகரமுதலியாரால் எழுதப்பட்ட 'கந்த உபத' (கந்தர் திருவவதாரம்) சிங்கள கிரந்த மொன்றில் மேற்கூறிய சம்பவம் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. 41-ம் 46-ம் செய்யுள்கள் துட்டஜம்னு வரசன் கதிர்காமசுவாமியை நோக்கித் தவங்கிடந்து அருள் பெற்றுச் சத்துருவை வென்று பின் தன்பிரதிஞ்ஞைப் படி கோயில் கட்டிச் சர்வமானியம் விட்டானென்பதை ஸ்திரப்படுத்துகின்றன. இந்த ராசமானியங்கள் துட்ட ஜம்னுவுக்குப் பிந்திவந்த ராசாக்களாலும் ஏனை ராசகுமாரர்களாலும் மற்றையவர்களாலும் காணிக்கைகளாலும் வரவர அதிகரித்து வந்தன. சுதேசவரசர்காலத்திருந்த விசாரணையும் இராசபரிபாலனமும் இல்லாமற் போனமையாலும், புத்தாலய ஒழுங்குப் பிரமாணப்படி அதிகாரிகளான உத்தியோகத்தராலும் சிங்கள குருமாராலும் தீயொழுக்கத்தாலும் நேர்மையீனத்தினாலும் இச்செல்வமெல்லாம் பலகாலமாக நிர்ப்பந்தமான நிலையிலிருந்துவருகின்றன. இவ்வாலயத்தின் பூஸ்திதிகள் அநேகம் பிறர்கைப்பட்டன. மிகுதியானவை தேடுவாரற்றனவாயின. ஆலயக் கட்டடங்கள் இலமாய்க் கிடக்கின்றன. நித்தியபூசையும் முட்டடைகின்றது. ஆயபோழ்தும், சைவயாத்திரிகர்கள் ஆயிரக்கணக்காக வந்து காணிக்கைகளை மட்டின்றி இறைக்கிறார்கள். பழிப்புக்கிடமான இவ்வதிகாரம் எப்பொழுது முடிவாகுமோ என்பது அவர்கள் வேண்டுகோள்.

இந்தக்காலத்தில் கொழும்பிலிருந்து புகைவண்டி மார்க்கமாக மாத்துறைக்குச் சென்று மோட்டர்வண்டி மார்க்கமாக அம்பாந்தோட்டைக்கும் திசைமகாறாமைக்கும் இலகுவாக யாத்திரைசெய்தல் கூடும். திசைமகாறாமையிலிருந்து அப்பாற் பதினொருமைல் தூரம் பெருங் காட்டையும் பாலமில்லாத யாற்றையும் தாண்டிச் செல்லல்வேண்டும், மாணிக்க கங்கையின் பெருக்குக்காலங்களில் வள்ளமில்லாமையால் நீந்திப் போகவேண்டும். சென்ற நூற்றாண்டின் முற்பாகத்தில் கொழும்பிற்றாலும் கல்ல தெருக்களில்லாத காலத்தில் ஏன்பாட்டியார் சேர் முத்துக்குமாரசுவாமியெனப் பின் பேர்படைத்த தன் குழந்தையின் நோய் நீக்கத்தின் பொருட்டுச் செய்த பிரதிஞ்ஞையை நிறைவேற்ற வேண்டி, கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்குக் கால்நடையாக யாத்திரைசெய்து திரும்பினர். அக்காலத்தில் அநுபவித்த கஷ்டங்களை, இந்தியாவிலிருந்தும் வடமாகாணம் கீழ்மாகாணம் ஊவாமாகாணங்களிலிருந்தும், காட்டுமார்க்கமாக, கால்நடையாகப் பிரயாணஞ்செய்யும் ஆயிரக்கணக்காயினோர் இக்காலத்திலும் வருடந்தோறும் மனக்களிப்போடு அநுபவித்துச் செல்லுகின்றனர். இவர்கள் எல்லாரும் முருகவேளின் பெருங்கருணையை எப்பொழுதும்விசுவசிப்பவர்கள்; அவர்எப்பொழுதும் பாதுகாப்பார் என்று நம்பினவர்கள். நோய்நீக்கம், ஆபத்துக்காலத்திலுதவி, இடுக்கண் களைதல் முதலிய வரங்களை இக்கடவுள் அநுக்கிரகித்துவருதலை அநுபவத்திற் கண்டவர்களே அவ்வனுபவங்களைச் சொல்பவர்கள். அநேக நாட்களாக அடர்ந்த காட்டுக்கூடாக இரவும் பகலும் தனியேநடந்து பிரயாணஞ்செய்த ஓர் கிழவியை, காட்டுயானை காடி முதலியவற்றிற்குப் பயமில்லையோ என்று கேட்டேன். "அநேக மிருகங்களைக் கண்டேன்; அவைகள் என்னைத் துன்பப்படுத்தில; முருகையன் என்பக்கமாயிருப்ப இவைகள் என்னை எவ்வாறு சமீபிக்கும்" என்று கூறினள். முற்கூறியசெய்யுள்கள் யாத்திரிகர்களுடைய வைராக்கிய பக்தியைக் குறிப்பனவாகும். (தொடரும்.)

## வைதிக சைவமே சமயங்கட்கெல்லாந் தாயகமானது.

வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்க பிள்ளை
எழுதியது.

கலைவல்லீர்!

உலகின்கண்ணே பொருந்திய சமயங்கள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்து விளங்குஞ் சத்தியநெறி, "வைதிகசைவம்" ஒன்றேயாம். இதில் கடவுள், ஆன்மா, மலம், கன்மம், மாயை என்னும் பொருள்களின் தன்மைகளை உள்ளபடி, "அங்கை ஆமலகக்கனிபோல" விளக்கியிருக்கின்றன. எந்தச் சமயத்தின் கொள்கையும், வைதிக சைவத்தின் ஓர் பகுதியிலே அடங்கும். வைதிகசைவத்தின் கொள்கையோ, அவ்வாறு அடங்குவதன்று. வைதிகசைவத்தில் அடங்காத ஓர்உண்மையை வேறொரு சமயம் அரிதாகக்கண்டு கூறிற்றென்பதை நாம் ஒருகாலத்துங் கேட்டோமில்லை. மற்றைய சமயங்களிலே காணப்படாத பல அரிய உண்மைகள் வைதிகசைவத்திலே காணப்படுதலை, நாம் பன்முறைகளிலறிந்துமிருக்கின்றோம்; கேட்டுமிருக்கின்றோம். அது எவ்வாறெனில், இம்மாநிலமீதுள்ள மதங்களில் சில பௌதிகமான பிரபஞ்சத்தைமாத்திரம் ஏற்றுக்கொண்டு, மற்றுள்ள பொருள்களை மறுக்கின்றன; வேறுசில பௌதிகப் பிரபஞ்சத்தையும், அதன் காரணமான பூதங்களையும் மேற்றுக்கொண்டு, மற்றுள்ள பொருட்களை மறுக்கின்றன; இன்னுஞ் சில பூதபௌதிகங்களோடு ஆத்மாவையும், கன்மத்தையும் ஏற்றுக்கொண்டு மற்றையவற்றை மறுக்கின்றன; வேறுசில அவற்றோடு மூலப்பிரகிருதியையும், பிரபஞ்ச காரண கர்த்தாக்களையும் ஏற்றுக்கொண்டு மற்றையவற்றை மறுக்கின்றன. இவை முதலாகிய அநேக சமயங்கள் பலதிறப்படக் கூறித் தலைதடுமாறி மயங்கிக் கிடக்க, வைதிக சைவமோ, இச்சமயபேதங்கள் கூறும் பொருள், இயல்புகள் எல்லாவற்றையும் தன்னகத் தடக்கி இப்பௌதிக பிரபஞ்ச இயல்பினையும் இதன் காரணபூதங்கள், தத்துவங்கள், மூலப்பிரகிருதிகள் ஆகிய இவற்றின் தன்மைகளையும், கன்மமலம் ஆணவமலம் இவற்றின்நிலைவேறுபாடுகளையும், ஆன்மா, சிவம் என்னும் பொருள்களின் சொரூப தடஸ்தநிலைகளையும் உள்ள உள்ளபடி விளக்கி, அச்சமயபேதங்கள் யாவற்றினும் முதன்மைபெற்று, பாஞானமாகிய மௌலியைத் தன் சென்னியிற் புனைந்து, முடிந்த முடிபு என்னும் பொருளைத் தரும் "சித்தாந்தம்" என்னும் சிறப்புப்பெயர் பெற்றுத் தனிச் செங்கோல் செலுத்தி நிற்கின்றது. இச்சுத்தாத்துவித வைதிகசைவசித்தாந்தத்துக்கு முதலாசிரியர் பிறந்திறவாத அநாதிநித்தியராகிய சிவபெருமான். ஏனைச் சமயங்கட்கோ, மலசகிதராய்ப் பிறந்திறந்துழலும் சாஜன் மங்களாயுள்ளார்.

இவ் வைதிக சைவம் அரசு செலுத்துதற்கு இராச தானியாகவுள்ள பரிசுத்த தலம் பரதகண்டமே. ஆர்சவியுடைத்த அவனியிற் பரதகண்டத்தை மாத்திரம் புண்ணியபூமி யென்று கூறுதற்குக் காரணம் யாதெனில், இதில் மூர்த்தி தலம் தீர்த்த விசேடங்களிருத்தல் பற்றியேயாம். இம் மூர்த்தி தலம் தீர்த்த விசேடங்கள் வேதாகமங்களிலும், புராணேதிகாசங்களிலும் அதிகமாயெடுத்துக் கூறப்பட்டுள்ளன. வேதாகமம் முதலியவைகளில் அமைந்துள்ள மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் இவற்றைக் கொண்டு சிவவழிபாடு செய்தோர் அடைந்த பேறுகள் புராணேதிகாசங்களில் விரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால் சமஸ்த மதங்களினும், மோக்ஷசாதனங்களாயுள்ள கன்மப்பகுதிகட்கும், ஞானமார்க்கங்கட்கும் தாரகமாயுள்ள சமயம் வைதிக சைவமேயாம். இதுபற்றியே ஸ்ரீ தாயுமான சுவாமிகளும்,

> "அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின்
> றறிஞரெலா நடுவறிய வணிமா வாதி
> வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
> வைத்திருந்த மாதவர்க்கும் மற்று மற்றும்
> இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
> இதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை
> சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத்
> தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம்"

என்று விளக்கியருளினர். எந்த மூர்த்தியும், எந்தத் தலமும், எந்தத் தீர்த்தமும் வைதிகசைவ முத்தி சாதனங்களாகவேயிருக்கின்றன. நடராஜமூர்த்தி, விசுவேசமூர்த்தி, ஆத்மநாதமூர்த்தி, தியாகராஜமூர்த்தி, தோணியப்பமூர்த்தி, சோமாஸ்கந்தமூர்த்தி, சொக்கலிங்கமூர்த்தி, காயாரோகணமூர்த்தி முதலிய மூர்த்திகளின் விசேட மகிமைகளையும், சிதம்பரம், காசி, திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சீகாழி, திருவையாறு, காஞ்சி, திருநாகைக்காரோணம் முதலிய தலங்களின் விசேட மகிமைகளையும், கங்கை, யமுனை, கோதாவிரி, காவிரி, தாமிரபர்ணி, சேது முதலிய தீர்த்தங்களின் விசேட மகிமைகளையும், எவர் மறக்கற்பாலர். குன்றமெறிந்த குமரவேளின் அம்சமாயுள்ள திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும், வாகீசமுனியின் திருவவதாரமாகிய திருநாவுக்கரசுநாயனாரும், அம்பிகை கேள்வனது விம்பமாய் ஆடியின்கண்ணெழுந்த ஆலாலசுந்தரரின் திருவவதாரமாகிய சுந்தரமூர்த்திநாயனாரும், குடமுழாநந்தியின் திருவவதாரமாகிய மாணிக்கவாசக சுவாமிகளும், அருள்ஞான வள்ளல்களாகிய மெய்கண்டதேசிகர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்தசிவாசாரியர், உமாபதிசிவாசாரியர் ஆகிய சந்தான குரவர்களும், ஏனைய உண்மை நாயன்மார்களும இதுவே உண்மைச்சமயமென ஸ்தாபித்து, உலகத்திலுள்ளவர்கள் யாவரும் ஈடேறத் திருவருள் வளங்கியது இவ் வைதிகசைவமன்றோ? சங்கராசாரியர் முதலிய மதாசாரியர்களும், இம் மூர்த்தி தலத் தீர்த்தச் சேவை செய்து திருவருள் பெற்றதும் உலகறிந்த விஷயமே. இனி இவ் வைதிகசைவத் தனியரசுக்கு ஒப்பற்ற செங்கோலாவது சிவஞானபோதமேயாம். இது எல்லாமுணர்ந்த முதல்வன் திருவாக்காகும். பதிபசு பாசம் என்னும் திரிபதார்த்தங்களினுடைய பொது இயல்பையும், சிறப்பியல்பையும் தேறாது மயங்குவோர்க்கு, அம் மயக்கம் நீங்கி அவ்விரு இயல்பையும் ஒருங்குணர்த்த எழுந்தது இச்சிவஞானபோதமே. வேதாகமப் பொருள்கள் அனைத்தையும் முடித்துக் காட்டிச் சித்தாந்தமாய் விளக்கலின், இது சித்தாந்த மகாசூத்திர மெனவுஞ் சொல்லப்படும். இதற்கு இணையாயதொரு சூத்திரம் வேறு கிடையாது. என்னை? வேதாந்த சூத்திரம், சூத்திரவடிவாய் விளங்குதலில், வேதாந்தசூத்திரமோ சித்தாந்தசூத்திரமோ மிகச் சிறந்ததென ஒரு ஆசங்கைநிகழும்; அவ்வாறு ஆசேஷபித்தல் ஆபாசமாகும். ஏனெனில், சித்தாந்த மகாசூத்திரம் முதல்வன் திருவாக்கு. வேதாந்த சூத்திரம் வியாசர் வாக்கு. முதல்வன் திருவாக்கையும், முனிவர் வாக்கையும் சமப்படுத்தி ஆராய்தல் உய்தியில் குற்றமன்றோ? வியாசர்வாக்கில் முக்குணவசத்தான் முறைபிறழ்ந் துரைக்கும் நீர்மை காணப்படும். அது "ஐயிரு புராணநூல் அமலர்க் கோதியுஞ் - செய்ய பன் மறைகளுந் தெரிந்து மாயையான் - மெய்யறு சூழ்புகல் வியாதன்........" என்பதனால் வியாசமுனிவரிடத்து அந்நீர்மையுண்டென்பது தேற்றம். வேத வியாசர் அந்நூலைச் செய்யும்போதே பொருள் பலபடத்தோன்றும்படிசெய்தார். அதுபற்றியே நீலகண்டசிவாசாரியரும், சங்கராசாரியரும், இராமானுஜாசாரியரும், மத்துவாசாரியரும், பிறரும் தத்தம் மதக்கொள்கைகட்குத் தக்கவாறு ஒருவரோடொருவர்முரணிப் பலவகைப்படப் பொருள் கூறிப் பாஷியங்கள் செய்தனர். சிவஞானபோத சூத்திரமோ எவராலும் பொருள் பேதிக்க முடியாது உண்மைப் பொருள் ஒன்றே பயப்பது. குருத்தமரநீழ

யிலே திருவாதவூர் என்னும் மாணிக்கவாசகப்பெருமானுக்கு ஞானப்போதிக்களுவாகி, இயல்பென்னுந் திரியாத வைதிக சைவத் தனியரசுக்கு அருமைச் செங்கோலாய் விளங்குகின்றது. ஆதலால், அன்பர்களே! புறச்சமய நூல்களையும், மாயாவாத மயக்க நூல்களையும் கற்றுக் காலத்தை அவமே போக்காது, வைதிக சைவத் தனியரசின் செங்கோலாகிய சிவஞான போதத்தைச் சற்குரு முன்னிலையிலே, ஐயந்திரிபறக் கற்று, சாக்ஷாத் சிவபெருமானே முழுமுதற் கடவுளெனத் தெளிந்து அவரிடத்திலே அநவரதமும் முறுகிய அன்புசெலுத்தி, "இரும்புண்ட நீர் திரும்பாத தன்மைபோல" நித்திய மாகியமுத்திநிலையை யடையக்கடவீர்கள்.

"அட்டவுருவுட னெல்லாச் சரமசரங்களினு நட்டமிட் டாடுஞ் சிவனையெண் ணுகிர்த நாவிலத்திற்- கெட்ட கருக்குழிப் பட்டோரைத் தேவெனுங் கேடிலிகாள்!-பட்ட மரத்திற்குத் தண்ணீரைப் பாய்ச்சிற் பயனில்லையே!.

## உலகம் பலவிதம்.

குலைந்த குஞ்சியும் சரிந்த பார்வையும் வாடிய முகமுமாய் ஆறுத்துயருடன்புலம்பிக் குந்திக்கொண்டிருக்கும் நல்லூர்ச் சாராய நாதனிடம் திரு. தினவெறியன் சென்றான். தமையனைக் கண்டவுடன் தினவெறியன் ஐயோ! ஐயோ!! வென்று வாய்விட்டலறி,

"ஆருமற்ற பாவியானோம்
ஆசையண்ணா நாங்கள்
ஆறுபேரைப் பறிகொடுத்தோம்;
நாடிழந்தோம் நகரிழந்தோம்
ஆசையண்ணா நாங்கள்
நட்டாற்றுத் துரும்பானோம்;
மாபாவி நாமானோம்
ஆசையண்ணா நாங்கள்
மாநிலத்திற் கெட்டலைந்தோம்;
எங்கள்பெருமைகளைப் பாராட்டி
என்னுடற்பிறப்பே'என்னுயிரே
எங்களை ஆதரிப்பாராருமில்லை;
பட்டணத்தார் கைவிட்டார்
என்னண்ணா எங்களையும்
படாப்பாடு படுத்திவிட்டார்."

என்றழுது சிறிதுவேளையில் அயர்ந்து விழுந்தான். சாராயநாதனும் அவன்மேல் விழுந்து புலம்பினான்; புரண்டான். அதன்பின் தினவெறியன் அறிவுவரப் பெற்றெழுந்து"அண்ணே! 'அருகுசாவை போல்வாழும் அனுசர் யாரும் வானேற, உருகி மாழ்கி நீ சோக, முறினும மீள வாரார்கள்' போனதை நினைந்து மனம் வருந்தாதே" என்றான். "தம்பி! என்ன செய்வோம். எங்கள் கதி இப்படியாக முடிந்தது. 'பனைநெடுங் கைப்பகட்டு வெஞ்சேனைசூழ், இணைதரும் சொற்கிளைஞர்கள் யாரையும், துணைவர் யாரையும் தோற்றுநின்றேனெனக், கிளையர் யார் பிசையாருளரெண்ணிலே' என்று துரியோதனன் சொன்னது போல நானும் ஆனேன். எனக்குற்ற துணைவர்கள் எல்லோரும் சென்ற சனிக்கிழமை ஒரே நேரத்தில் முடிவார்களென்று ஆர்தான் காத்திருப்பார்கள். எனக்கும் அழிவு வந்ததென்பதை அன்றுதானே அறிந்தேன்" என்று சாராயநாதன் விம்மலும் பொருமலுமாகக் கூறிப் புலம்பினான். தினவெறியன் "அண்ணே! இப்படியான ஒரு அழிவு எங்களுக்கு வருமென்று நான் பலமுறையும் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஒரு நாள் அதைப்பற்றி நான் அதிகமாகச் சொன்னபோது நீங்கள் என் கன்னத்தில் அடித்த அடி இன்றைக்கும் நோகிறது. உங்கள் நன்மை கருதிச் சொன்ன சொற்களில் ஒன்றுதானும் உங்கள் செவியில் ஏறவில்லை. நடந்துபோன விஷயங்களைப்பற்றி யோசிப்பதனால் ஆவதொன்றில்லை" என்றான்.

* * *

தம்பி கூறிய வார்த்தைகளினால் மேலும் மேலும் அதிக துயரமும் சிறிது ஞானமும் உதிக்கப்பெற்ற சாராயநாதன் "தம்பி! இந்த நாட்டிலே எத்தனை அக்கிரமத்தைச் செய்தேன்; எத்தனை கலகத்தை விளைத்தேன்; எத்தனை குடும்பத்தைக் குலைத்தேன்; எத்தனை பெண்களைப் பேரிடர்ப்படுத்தினேன்; எத்தனை கொலையைச் செய்தேன். என் நாவசைய நாடசைந்தது. இப்போது எல்லாவையும் பறிகொடுத்து ஏழையானேன். 'சாற்றினென்வினை தானென்னையே சுடக், கூற்றின் வாய்ப்புகுந் தேற்கென்ன கூற்றையா' இந்தப் பொய்யான வாழ்வை மெய்யென்றெண்ணியல்லவோ நீ சொன்ன உறுதிவாக்கியங்களை யெல்லாம் அவமதித்தேன். அன்று படுகொலைப்பட்ட என் தம்பியருடைய பிரேதத்தைத்தானும் எனது நண்பர் சிலர் கண்ணில் முழிக்கக் கொடுத்துவைக்கவில்லையே. தம்பி! இனி என்ன செய்யச் சொல்லுகிறாய்" என்றான்

"அண்ணா இனி நான் சொல்வதிலும் அதைநீர் செய்வதிலும் ஆவதொன்றில்லை. எங்கள் அக்கிரமத்தினால் எங்களுக்கு நேர்ந்த அழிவுக்காகச் சிநேகிதரை ஏன் நோகிறீர். அன்று கொலைந்தவர்களுக்குப் பிரியாவிடைக் கூட்டம் வைப்பதற்காக நீர்தானே அவர்களைத் தோணியேற்றி மண்டைதீவுக்கு அனுப்பி வைத்தீர். விருந்துக்காகக் கொண்டுபோகப்பட்ட ஆட்டுக்கடாவின்மேல் பிறண்டித்துரை பாய்ந்து ஏறிச் சவாரிவிட்டபோது தோணி கவிழ்ந்து ஆட்கள் சிலரும் பிறண்டித்துரையும் கடலின் ஆழம் பார்க்கப் போனவர்கள் இன்னமும் திரும்பவில்லையாம். துரையின் தொப்பிமாத்திரம் பண்ணைத்துறைக்கு இன்று காலை சுகமே வந்து சேர்ந்ததாம்" என்று தினவெறியன் கூறினான்.

* * *

"தம்பி! உன்னுடைய இதைப்பற்றி இனி ஒன்றும் கூறாதே. என்னாலே தாங்க முடியவில்லை. எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. என் கண்கள் மின்னுகின்றன" என்றான் சாராயநாதன். "உம்முடைய கண்கள் இனி மின்னியென்ன; முழங்கியென்ன; எங்கள் கருமம் ஒன்றும் இனிமேல் நடவாது. பதினெட்டாம் நாட் போரிலே துரியோதனன் தாமரைக் குளத்தினுள் ஒழித்திருந்ததுபோல நீரும் எங்கேயாவது ஓடி மறையப் பார்க்கிறீர். குளத்திலல்ல, பாதாளத்திற் போனாலும் இனிஒன்றும் ஆகாது. பட்டினத்துள்ள தம்பியர் மாண்டபின் இந்த ஊராரும் அதிக ஆத்திரங்கொண்டிருக்கிறார்கள். சிலர் 'எல்லாரும் துஷ்டநிக்கிரகம் செய்து வாழ, நாங்கள் மாத்திரம் இந்த மூவராலும் நாசமடைய வேண்டுமோ' என்கிறார்கள். சிலர் 'வருகிற ஆடி மாதம் பிறந்தால் குடிகாரர் எல்லாரும் எங்களூரிற்றான் குடியேறுவார்கள்; கலகமுங் களவும் அதிகப்படும்' என்கிறார்கள். சென்ற சனிக்கிழமைக்குப் பின் எங்கள் அபிமானிகளும் எங்களுக்குமாறுபட்டு நிற்கின்றார்கள். நாளைப் போரில் நாங்கள் மூவரும் இறத்தல் திண்ணம். உமக்குத் தம்பியாகப் பிறந்ததே என்மீதுள்ள குற்றம். நீர் இறப்பதைக் காணுமுன் நான் இறந்துவிடுகிறேன். தல்லாலையாலும் தன்னால் இங்கே நடந்துவர முடியாதென்றும், ஈரலில் உண்டான நோய் அதிகப்படுகிறதென்றும், வேறெங்காவது விழுந்து இறப்பதிலும், தன் சொந்த ஊரில் தான் கட்டிய வீட்டிலே கிடந்து உயிர் விடுவதே தன் விருப்பமென்றும் கூறிவிட்டான். இனிப் பேச்சென்ன. 'செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள், கத்துங் கணக்கென்ன காண் கயிலாயத்தனே' என்றதுபோல, நாளைக்குச் சாகும் நாங்கள் புலம்புவதனால் ஆவதென்ன. நாங்கள் இறந்தாலுங் காரியமில்லை; உலகமாவது நன்மையை அடையட்டும்" என்று தினவெறியன் இதோபதேசஞ் செய்தான்.

* * *

இந்த இதோபதேசத்தினாற் சாராயநாதனிடத்துள்ள கவலைகளும் உலக எண்ணங்களும் மாறிவிட்டன. அவனுக்கு ஞானோதயமாயிற்று. அவன் "தம்பி! நாங்கள் இறப்பது நிச்சயந்தான். இனி இருந்தும் பயனில்லை. இறந்தபின் எங்கே போவோம்; எப்போ போவோம்;" எனலும், தினவெறியன் "நாங்கள் செய்த அக்கிரமத்துக்கேற்ற கஷ்டத்தை அனுபவிக்கத்தக்கதான நரகம் அங்கே இதற்கு முந்தி இல்லையாம். எங்களுக்கென்று ஒரு குரூர நரகம் இப்போதுதான் அமைக்கிறார்களாம். அந்நரகத்தில் நாங்கள் வாடும் மண்டபங்களின் தளங்களிலே நிறுத்தி வைத்துப் பதிப்பதற்காகக் கண்ணாடிப் போத்தல் ஓடுகள் இங்கிருந்துதான் அனுப்பப்படுகின்றன. கட்டட வேலை முடிய இன்னும் ஐந்தாறுமாசம் வரையிற் செல்லுமாம்" எனலும் இதனால் அதிக கலக்கமுற்ற சாராயநாதன் சிறிது ஆறி சோர்ந்து பின் "தம்பி! அதுவரையும் நாங்கள் செய்வதென்ன; நிற்பதெங்கே" யென்றான். "அண்ணே அதுவரையும் இங்கே இந்தத் தெருவழியே பேயாய்த் திரிவோம்; ஆரும் சந்தித்தவர்களையும் இடறுவோம்; பெருங்காயம் தேய்ந்தாலும் குடுக்கை மணங் கொடுக்குமென்றதுபோல, நாங்களும் இறந்தாலும் பிரேதமிருக்கிறவரையும் எங்கள் வீரத்திலும் ஒரு பகுதி யிருக்கும். தனஞ்சயன் என்ற வாயு மண்டை வெடித்தபின் நீங்குவதுபோல, எங்கள் சத்தியிலுமொன்று தகனம் வரையும் நிலைநிற்கும். வேண்டுமானால் வருகிற ஆடிமாதச் சுப்பிரீங் கோட்டுக்கும் நாங்கள் ஏதும் உதவி புரியலாம். அதன்பின் தான் எங்களுக்கென அமைக்கப்படும் குரூர நரக கிருகப்பிரவேசம் செய்வோம்" என்று கூறும்போது நடுக்கமுற்று அயர்ந்து நிலத்தில் வீழ்ந்தான். சாராயநாதனும் இருந்தபடியே சாய்ந்துவிட்டான்.

## இருவர் ஆற்றில்மூழ்கி இறந்தனர்.

நற்மலானு என்னுமிடத்திலே இரண்டு கூலியாட்கள் ஆற்றில் நீராடினபோது நீரோட்டத்தினால் அள்ளுண்டு மாண்டனர்.

## ஆறுவார மறியலும் நூற்றைம்பது ரூபா அபராதமும்.

மாத்துறையிலே கரோலிஸ் என்னும் ஒரு சிங்களவன் சோரமர்கள் கள்ளுவிற்றானென்றும், அவனிடம் ஆறு கலன் கள்ளிருந்ததாகவும் அங்குள்ள பொலிஸ் கோட்டிலே குற்றம் சாட்டப்பட்டான். நீதிபதி எதிரிக்கு ஆறுவாரக் கடூழியச் சிறையும் நூற்றைம்பது ரூபா அபராதமும் பணமிறுக்கத் தவறினால் மேலும் ஆறுவாரக் கடூழியச் சிறையும் விதித்தனர்.

## அவுஸ்திரேலிய இராசப் பிரதிநிதியின் ஆகாய விமானம்

அவுஸ்திரேலிய இராசப்பிரதிநிதியாக நியமனம்பெற்ற லோட் ஸ்ரோன் ஹாவின் அவர்கள் அவுஸ்திரேலியாவிலே சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக ஓர் ஆகாயவிமானம் இப்பொழுது இங்கிலாந்திலே அமைக்கப்படுகிறது. அதன்உள் அறை நால்வர் இருக்கக்கூடியதாகும். நிலத்தில் ஓடவேண்டிவரும்போது உருளக்கூடியதாகச் சிற்களும் தண்ணீரில் ஓடவேண்டில் அதற்குத்தக்க நீந்து கருவிகளும் அதில் அமைக்கப்படுகின்றன.

## காளி தேவிக்குப் பலி.

வைப்பொங்கற்றினத்தன்று கல்கத்தா என்ற காளி கட்டத்தில் உள்ள பேர் போன காளி தேவியின் திருவடி முன் வடநாட்டுக் கிழவர் ஒருவர் இருந்து தியானம் செய்துகொண்டிருந்தார். பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் சூழ்மியிருந்தார்கள். திடீரென்று அவர் ஒரு கத்தியை எடுத்து கழுத்தை அரிந்துகொண்டார். காளியின் முன்னே ரத்த ஆறு ஓடியது. எல்லோரும் அஞ்சி நடுங்கினர். அச்சப் பக்தர்மகா புண்ணிய தினமான அன்று மனிதர் செய்யக்கூடிய பெரிய தியாகமாகத் தன்னையே தனது பாவம் தீருமாறு செய்துகொண்டதாகச் சொன்னாராம். 'லோ-கி.'

## மோட்டர் விபத்து
### [illegible]பரிபாலனப் பரிசோதகர் மாண்டனர்.

[illegible]ன்ற செவ்வாய்க்கிழமை இரவு எழுமணி[illegible]யில் கேகாலையிலே மதுபரிபாலனப் பரிசோதகராகிய மிஸ்ரர் பீரிஸ் என்பவர் தமது மோட்டர் "சைக்கி"லிற் பிரயாணம் செய்தபோது எதிரே வந்த பஸ்வண்டியுடன் மோதுண்டது. "சைக்கிள்" வண்டியிற் பின்னே இருந்த சார்திலிஸ் என்னும் சேவகன் தூரத்தே எறியப்பட்டு இடது காலும் வலதுகையும் முறியப்பெற்றான். மிஸ்ரர் பீரிஸ் பஸ்வண்டியினால் இடறுண்டனர். பஸ்வண்டி இடறுண்டவரை நாற்பத்தொரு அடி தூரத்துக்கு இழுத்துச் சென்றபின் நிறுத்தப்பட்டது. பீரிஸ் உடனே இறந்தனர். அவரது பிரேதம் பஸ்வண்டியின் கீழ்ச்சிதறுண்டு கிடந்தது.

## ஆறுதார யோகி.

கன்னியா குமரியில் நீராடுந் துறைக்கருகேயுள்ள சத்திரத்திற்குச் சமீபத்தில் சங்கராந்தி யன்று காலையில் கால் வேறு கைவேறு தலைவேறு ஆக ஆறு சின்னங்கள் காணப்படவே; ஏராளமான ஜனங்கள் கூடினார்கள். உடனே அந்த முண்டங்கள் ஒரே பிண்ட மாய்ச் சேர்ந்து ஒரு மனிதனாய், ஆ வென்று அலறிய சத்தத்துடன் எழுந்து கடலோரமாய்ப் போய்விட்டதாம். இவ்வாறு கண்டனயோகத்தால் தமதுசரீரத்தைத் துண்டாகச் செய்துகொண்டவர் திண்டுக்கல் வாசியாம். அவர் பெயர் ஆறுதாரயோகியா மென்று 'லோகோபகாரி' கூறுகின்றது.

## இந்தூர் சமஸ்தான நிலை.
### நாட்டியமாதினால் நேர்ந்த விளைவு.

இந்தூர் சமஸ்தானத்திலே மும்தாஸ் பீகம் என்னும் நாட்டியமாது காரணமாக நிகழ்ந்த பிணக்கு, கொலை, வழக்கு, தூக்குத் தண்டனை முதலானவற்றைப்பற்றி முன்னர் வெளியிட்டுள்ளோம் இவைகளுக்குக் காரணம் இந்தூர் சமஸ்தானத்துள்ள ஒழுங்கினமே யென உணர்ந்த அரசினர் பின்னரும் இதனை விசாரணை செய்யும்படி ஓர் சபையை அமைத்திருக்கிறார்கள். அச்சபை ஐந்து அங்கத்தவரையுடையதாகும். ஒரு உயர்தரமன்றத் தலைவரும் இரு இந்திய மகாராசாக்களுமாக மூவர் அச்சபை அங்கத உரிமையுடையராவர். அச்சபை தனது தீர்மானத்தை இந்திய பிரதிகாவலருக்குத் தெரிவிக்கும். அப்பொழுது இந்திய பிரதிகாவலர் அரசச் சக்கரவர்த்தியின் பிரதிநிதி யென்ற முறையில் அதனை யோசித்துத் தீர்மானம் செய்வர்.

## ஆழம்பார்த்த ஐரோப்பியர்.

தொலோய்இராச்சியப்பகுதியிலிருந்து புறப்பட்ட "ரீஸ்ரா" என்னும் புகைக்கப்பல் போட்டோரிவோ என்னுமிடத்தைச் சமீபிக்கும்போது அக்கப்பலிற் பிரயாணம்செய்த புரோட்லேர்ஸ் என்னும் ஐரோப்பிய பத்திரிகாசிரியர் ஒருவர் கடலிற் குதித்தனர். உடனே கப்பலிலிருந்து தோணிகள் இறக்கப்பட்டன. பலர் ஒன்றரை மணிநேரம் அதிக சிரமப்பட்டுத் தேடியும் பிரேததைத யேனும் கண்டிலர்.

## தில்லையில் திருப்பணி.

சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் பொற்கோயிலான சிற்சபை நாடோறும் அபரிமிதமாக எரியும் கற்பூரப் புகையாற் சூழ்ந்து உள்ளேயுள்ள ஸ்வர்ணத்தம்பங்கள், பொற்றிருவாசிகள், பீடங்கள், ஆபரணங்கள், வெள்ளி விளக்குகள் முதலியவற்றின் உருத் தெரியாது மறைத்து இருள் சூழ்ந்திருந்தது. அவற்றினைச் சுத்தஞ்செய்ய வெண்ணி சிதம்பரம் ஸ்ரீபொன்னம்பல ஸ்வாமிகள் மடாலயம் பரஞ்சோதிஸ்வாமிகள் தமது நண்பர்களான காரைக்குடி சா. லெ. செட்டியப்பசெட்டியார் முதலிய நண்பர்களிடம் பொருள் வருவாய் பெற்று அதுகொண்டு பல ஆண்டுகளாய் மேற்படி ஆலயத்தின் வெளிப்புறம் எண்ணெயும் தூசும் படர்ந்து திருப்பணி தெரியாமல் பிண்டாகாரமா யிருந்ததை நூற்றுக்கணக்கான ஆட்களை வைத்துத் தூய தாக்கியும், உட்புறத்திலுள்ள கரிகள் எண்ணெயெல்லாம் தில்லைவாழ் அந்தணர்களைக்கொண்டு தூய்மை செய்தும், ஆபரணங்கள் வெள்ளி வெண்கலம் முதலிய பாத்திரங்கள் ஸ்வர்ணஸ்தம்பங்கள் பீடங்கள் முதலியவற்றை அழுக்கெடுத்து மெருகிட்டும் உள் வெளிமேல் புறமும் நாற்புறங்களும் சுமார் 500 ரூபாயளவுக்கு உயர்ந்த பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, புனுகு, பன்னீர் முதலியன சேர்த்து 400 சேர் சந்தனத்திற் கலந்து களபஞ்சாற்றியும், மஹாருத்திராபிஷேகப் பாவாடை நைவேத்யம் செய்தும் முன்னின்று பணிபுரிந்துதவிய தீக்ஷிதர்கட்குக் கதர்சால்வை உதவியும் ஸ்ரீநடராஜ மூர்த்திக்கும் கதராடை அணிவித்தும் புதுக்கோயில்போலக் கண்வர் கோலஞ் செய்வித்தனர். ஸ்ரீ பரஞ்சோதிசுவாமிகள் நாடோறும் ஸ்ரீசிற்சபையில் சந்திரமௌலீசுரர்க்கும், ரத்னசபாபதிக்கும் கதராடை சாத்தும்படி ஏற்பாடு செய்திருக்கின்றனர் என 'லோகோபகாரி' கூறுகிறது.

## குடியினாற் குலைந்த குடும்பம்.
### அதன் பேறு கொலை.
### அதன்முடிவு தூக்குமரம்.

தண்டகாரணத்திலே அலைவிஸ் என்னும் ஒரு பெண் பீனு என்னும் ஒருதினவெறியனுக்கு வாழ்க்கைப்பட்டு, இரண்டு வருட காலம் பேரிடர்ப்பட்டபின் இந்த வாழ்க்கையைக் காட்டிலும் இவனைவிட்டுத் தொலைவதே தக்கதெனத் தீர்மானித்து அவனை விட்டுப்பிரிந்து தன் தமையனாகிய ஜெட்டா என்பவனிடம் சென்று வசித்துவந்தாள். குடிகாரன் அவளைத் தன்வீட்டுக்குக் கொண்டுபோக முயன்றும் வாய்க்கவில்லை. இருவரும் கோட்டில் முற்பட்டு விவாக நீக்கமும் செய்யப்பட்டது. வெறிகாரன் பின்னரும் அவளைப் பெறமுயன்று தன் நோக்கம் நிறைவேறாமையினால் அவளைக் காத்திருந்து கொலை செய்தனன். இவ்வழக்குச் சென்ற வெள்ளிக்கிழமை குருநாகற் சுப்பிரீங் கோட்டிலே விசாரணை செய்யப்பட்டு எதிரிமீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டது. ஏன் மரணதண்டனை விதிக்கக் கூடாதென்று நீதிபதி குற்றவாளியைக் கேட்டபோது அவன், "நான் என் மனைவியை அதிகமாக நேசித்தேன். அவள் என்னைவெறுத்துப் பிரிந்துவிட்டாள். என்னுடன் ஒத்துவாழும்படி நான் பின்னரும் பலமுறை கேட்டேன். அவள் குடிகாரனாகிய உன்னிடம் நான் ஒருபோதும் வரமாட்டேன்; வேறொருவரை விவாகம் செய்யப்போகிறேன் என்றாள். எனக்குக் கோபம் அதிகரித்துவிட்டது. அவளைக் கொலைசெய்ய வேண்டுமென்பது எனது நோக்கமல்ல. எவ்வளவு சிரமப்பட்டும் அவளைச் சேர்த்துக்கொள்ளவே நான் முயன்றேன். அவளைக் காயப்படுத்தியது உண்மையே. நான் என்ன செய்தேனென்பது எனக்குத் தெரியாது. கடவுளின் நாமத்தினாலும் உமது கருணையினாலும் என் அபராதத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" எனக் கூறினான். நீதிபதி "உன்னுடைய கூற்றை ஏற்றுக்கொள்வது கூடாததாகும். உன்னுடைய நடத்தையினால் நீ கொண்டுள்ள நோக்கங்கள் தீர்மானிக்கப்படவேண்டும். நீ அப்பெண்ணைப் பன்முறை காயப்படுத்தினை. அவற்றுள் மூன்று காயங்கள் மிகமோசத்துக் கேதுவானவை. உன்மீதுள்ள குற்றச் சாட்சிகள் நீயே கொலைக் குற்றவாளியென்பதை அத்தாட்சிப்படுத்துகின்றன. உன்மீது கருணைகாட்டுதற்கு வேண்டிய நியாயம் ஒன்றுமில்லை" யென்று கூறியபின் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

## தேகவியோகம்.

சென்ற மார்கழிமாதம் 12-ம் திகதி சனிக்கிழமை இரவு வண்ணார்பண்ணை கிழக்கு ஸ்ரீ மு. ச. சுப்பிரமணியமவர்களின் சகோதரி ஸ்ரீமதி மாணிக்கத்தம்மாள் எவரும் காத்திராதவண்ணம் தேகவியோகமாயினாரென்னும் துக்கசமாசாரத்தை அறியலானோம். இக்கன்னிகாரத்தினத்தை யிழந்து தீராத் துயருறும் சகோதரர் சுற்றத்தாரின் நிலைமை பெரிதும் பரிதாபப்படத்தக்கதாம். இவரின் அந்தியேஷ்டி தைமாதம் 12-ம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவரது அபரக்கிரியையில், சைவபரிபாலன சபைக்கு வாந்தனுப்பிய ரூபா இரண்டு சதம் ஐம்பது பெற்றோம்.

## மானிப்பாய்ச் சைவ மகாசபை.

மேற்படி நாமங்கொண்ட ஓர்சங்கம் மானிப்பாய் மத்திய சைவப் பாடசாலை மண்டபத்தில் சென்ற 22உ மாலை 6 மணியளவில் திருவாளர் இ. முருகேசபிள்ளை நியாயதுரந்தரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கூட்டப்பட்டது. ஏறக்குறையப் பெரியோருஞ் சிறியோருமாக 150 பேர் சமுகமாயிருந்தனர். பிரமஸ்ரீ S. சாமிக்குருக்களவர்களால் விநாயகர் பூசை நடத்தப்பட, மானிப்பாய் இந்துக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வை. சி. கந்தையபிள்ளையவர்கள் தேவாரபாராயணஞ் செய்தபின்னர், சபையின் உத்தியோகஅங்கத்தவர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் பின்வருமாறு:— சங்கத்தலைவர்—திருவாளர் இ. முருகேசம்பிள்ளையவர்கள். உபதலைவர்கள்—திரு முதலியார் தம்பிப்பிள்ளையவர்களும் திரு. வீரசிங்கமவர்களும். காரியதரிசிகள்—திரு. தா சுவாமிநாதன் அவர்களும் திரு. A. V. ஆறுமுகமவர்களும். ஆறு அங்கத்தவரையுடைய ஒரு நிருவாகசபையும் அமைக்கப்பட்டது. பின் அவ்விடத்திற் பிரபுக்களின் வேண்டுதற்படி சமுகமாயிருந்த யாழ்ப்பாணம இந்துக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதரும்இந்துசாதனத் தமிழ்ப்பத்திராசிரியருமாகிய திருவாளர் வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்களுக்குச் சபாநாயர் மாலைசூட்டி ஓர் சொற்பொழிவு செய்யும்படி வேண்டினர். அங்ஙனம் அவர் ஓர் சிறந்த சொற்பொழிவு செய்தனர். பின் திருவாளர் வை. சி. கந்தையபிள்ளையவர்களும் அக்கிராசனரவர்களும் நன்றிப்புரை சொல்லத் தேவாரபாராயணத்துடன் கூட்டம்சமாப்தியாயது. காரியதரிசி.

## புகைரதஸ்தானத் தலைவரும் சில துஷ்டரும்.

### குடிவெறியே காரணம்.

மஹோறாவுப் புகைரதத்தானத் தலைவராகிய மிஸ்ரர் ஏச். ஏ. குணதிலக என்பவர், பொலிஸ் பரிசோதகராகவிருந்த மிஸ்ரர் யோசேப் பெறறு, யூசே, யோன், அங்குள்ள பொலிஸ் விதானையாகிய குறே என்பவர்கள் வலாற்காரமாகப் புகுந்து சருவித் தீங்கிழைத்தார்களென்று களுத்துறைப் பொலிஸ் கோட்டிலே ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். வழக்காளியின் முறைப்பாடாவது:— "மஹோறாவிலுள்ள பந்தடிக் கழகத்துக்கு நானே அக்கிராசனர். இந்த ஜனவரிமாதம் 17-ந் திகதி எட்டின் என்னும் எனதுசேவகன் ஒருவன் யோசேப் பெறறு என்பவர் அதிக வெறியுடன் அங்கு வந்து பந்தடிக்கும் மேடைப்பக்கத்திலுள்ள வேலியைப் பிடுங்கினரென்றும் மிஸ்ரர் பி. டி. மாதினஸ் என்னும் ஒருவருடன் தர்க்கமிடுகிறாரென்றும் கூறினன். குறித்தபெறறு உரத்துப்பேசுவதை நான் கேட்டேன். நான் வெளியே வந்தபோது மாதினஸ் என்பவரை அவ்விடத்தை விட்டுத் தூரத்தாதிருந்தால் தான் முழு வேலியையும் பிடுங்கிவிடுவதாகப் பெறறு எனக்குக் கூறினர். நான் அவருடைய கேள்விக்கு உடன்படாது பெறறுவை நியாயவிரோதமாக வேலியைப் பிடுங்கவேண்டாமென்று கூறினேன். பெறறு உடனே அவ்விடத்தைவிட்டுச் சென்று சிறிது வேளையில், கையிலோர் தடியுடன் மோட்டர் வண்டி யொன்றில் வந்திறங்கி, அத்தடியினால் மாதினஸ் என்பவரை மும்முறை அடித்தார். இருவரும் கைகலந்து சிறிதுவேளையில் நிலத்தில் வீழ்ந்தனர். தூரத்தில் நின்றோர் அவர்களைத் தூக்கிவிட்டார்கள். பின்னரும இருவரும் சண்டையிடத்தொடங்கினார்கள். யூசே யோன் என்னும் இருவர் மிஸ்ரர் மாதினஸ் என்பவரைச் சருவினார்கள். நான் அவ்விடத்துக்குச் சென்று எல்லோரையும் வேறுபடுத்தி மாதினசைப் புகைரதஸ்தானத்திலுள்ள எனது அறைக்கு அழைத்துச் சென்றேன். இச்செய்தியைப் பெய்யஹலா என்னுமிடத்துள்ள பொலீசருக்கும் தெரிவித்தேன். இது நிகழும்போது இரவு ஏழரைமணிவரையிலாகும். எட்டுமணிவரையில் எதிரிகள் நால்வரும் மோட்டர் வண்டி யூர்ந்து புகைரதஸ்தானத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பெறறு "பிடுங்கு பிடுங்கு, எல்லாவற்றையும் பிடுங்கு" என்று கூறிய சத்தம் எனக்குக் கேட்டது. பெறறு பின்னரும் வேலிகளைப் பிடுங்குவதை நான் கண்டேன். அங்குக் கூடிய சனங்களின் தொகை 75 வரையிலிருக்கும். "ஏன் அறைக்குள் இருக்கின்றாய், வா வெளியே" என்று பெறறு உரத்துக் கூவினர். மாதினஸ் வெளியே செல்ல முயன்றார். நான் அவரைப் போகவிடாமல் தடுத்தேன். பெறறுவுக்குத் துணையாகத் துஷ்டர் அநேகர் வந்துசேர்ந்தார்கள். அடுத்தநாளும் அதிக கலகம் நிகழ்ந்தது. களுத்துறைப் பொலீசருக்குத் தந்திச் செய்தி போக்கினேன். ஒரு உப பரிசோதகரும் பொலிஸ் ஒருவரும் வந்துசேர்ந்தார்கள். இந்த இருவராலும் துஷ்டர்களை அடக்க முடியவில்லை. உப பரிசோதகர் ஆயுதபாணிகளான பொலீசர் வேண்டுமென்று தந்திச் செய்தி விடுத்தார். அவர்களும் இருவர் வந்து தோற்றினார்கள். துஷ்டர்கள் போய் மறைந்து விட்டார்கள். மறுதினம் கழகத்தாரால் ஒரு விருந்து நடத்தப்பட்டது. மிஸ்ரர் பெறறுவுக்கு அழைப்புப் பத்திரம் அனுப்பப்படவில்லை. மஹோறாவிலே அவருக்கு அதிக செல்வாக்குண்டு. விருந்திற் பங்குபெறாத காரணம்பற்றி இன்னமுஞ் சில அக்கிரமங்கள் நிகழ்தல்கூடும்" என்பதாம். நீதிபதி வழக்கை ஒப்புக்கொண்டு எல்லா எதிரிகளுக்கும் கட்டளை அனுப்பியிருக்கின்றனர்.

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

## புத்தளம்.

22—1—26.

இரவிற் பனியதிகம். சூரியவெம்பம் தாங்குதற்கரிதாயிருக்கின்றது. ஒருவித குளிர் காற்று இடையிடையே வீசுகின்றது. காய்ச்சலினாற் பலர் பீடிக்கப்பட்டு வருந்துகிறார்கள். முந்திய வருஷங்களிலும் இம்முறை காட்டுக் காய்ச்சல் மிகவும் மும்முரம்.

மின்சாரமூலம் வெளிச்சங் கொடுக்கும் நோக்கமாகச் சுகாதார சங்கத்தார் ஏற்ற ஒழுங்குகள் செய்திருக்கிறார்கள். அரசாங்கத்தாரின் வீடுகளிலும் பட்டினத்திற்குட்பட்ட தெருவீதிகள்தோறும் கம்பிகள் அமைத்து முடிகின்றன. இரண்டொரு மாசத்திற்குள் இவ்வெளிச்சம் பாவிப்பில் வந்துவிடுமென்றும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

வருகிற சித்திரைமாசம் முதலாந்திகதி தொடக்கமாக இப்பட்டினத்திற்குப் புகைரதப்போக்குவரவு தொடங்கிவிடுமென்று எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள். இப்போது அநுராசபுரம் குருநாக்கல சிலாபம் முதலிய இடங்களுக்குப் பஸ்வண்டிமூலமாகவே சனப்போக்குவரவு நடக்கின்றது. யாழ்ப்பாணத்திற்குப் பயணஞ் செய்பவர்களுக்காகப் புகைரதப்பகுதியார் நேரசூசிகையில் ஏற்ற ஒழுங்கு செய்து தருந்த வசதியும்ஏற்படுத்தினாலன்றிச் சனங்கள் பஸ்வண்டியைக் கைவிடமாட்டார்கள்போலத் தெரிகிறது.

கோடையும் மாரியும் தண்ணீர் இங்கே ஒரே விலைதான். தைமாசத்திலும் ஒரு தகரம் தண்ணீர் இரண்டுசதம்; ஆனிமாசக் கடுங்கோடையிலும் அந்தவிலைதான். ஒன்றரைமைலுக்கப்பாலுள்ள ஒரு ஊற்றுக் கிணற்றிலிருந்து வாய்க்கால் மூலமாக ஒரு பெரிய தொட்டியிற்குட் பாய்ந்து தண்ணீர் நிறைந்து நிற்கிறது. அத்தொட்டியிலிருந்து பட்டினத்திற்குள் தோண்டிக் கட்டப்பட்டிருக்கும் பல கிணறுகளுள்ளும் குளாய்மூலமாக அத்தண்ணீர் பாய்கிறது. இக்கிணறுகளிலிருந்தே பட்டினவாசிகள் தங்களுக்கு வேண்டிய தண்ணீரைப் பெறுகிறார்கள்.

ஒரு மைலுக்கப்பால் மாரியம்பாள் சந்நிதானமுண்டு. அத்தேவி கோயிலுக்கு முன்பாக ஒரு குளமுண்டு. இது மாரிக்காலத்தில் மழைத் தண்ணீரால் நிறைந்திருக்கும். இக்குளத்திலே பலர் ஸ்நானஞ் செய்கிறதுமுண்டு.

மழைத்தண்ணீர் நீர்ப்பாய்ச்சல் முதலிய உபயோகத்திற்குப் பயன்படும் வண்ணம் அரசாங்கத்தார் பத்துமைலுக்கப்பால் 1160 ஏக்கர் கொண்ட நிலத்தைச் சுற்றிவர உயர்ந்த பெரு மதில்போலும் அணை கட்டிச் சென்ற மாரிக்காலம் விழுந்த மழைத் தண்ணீரைத் தடுத்து ஒரு பெரியகுளமாக்கியிருக்கிறார்கள். இது இப்போது தப்போவாக்குள மெனப்படும். இக்குளத்திலிருந்து இப்பட்டினத்திற்குத் தண்ணீர்வசதி ஏற்படுத்தக்கூடிய ஒருகாலமுமொருமென்றமெண்ணுகிறார்கள். அக்காலம் பட்டினத்திற்கு ஒரு நற்காலந்தான்.

இவ்வூர்ச் சைவநேயர்கள் வணங்குவதற்கு ஒரு அம்பாள் கோவிலும் ஒரு சுப்பிரமணியர் ஆலயமுமிருக்கின்றன. ஒன்று செட்டிப்பிள்ளைகளின் ஆதீனத்திலும் மற்றது மற்றுஞ் சைவ மக்களின் பராமரிப்பிலு மிருக்கின்றன.

இவ்விடத்திலே பழைய சரித்திர ஆராய்ச்சிக்குரிய பலவிடங்க ளிருப்பதாகவும் விசயன் இறங்கின இடம் இதுவென்றும் பலர் சொல்லுகிறார்கள். கடித.

## வித்தை விரும்பு.

உலகத்திற் றோன்றி யழியும் எண்ணிறந்த சிருட்டிகளுள் அரிய மானிடப்பிறவியையெடுத்தோரெல்லாம் இன்பத்தையே விரும்புகின்றனர். அதிலும் சிறிதுகாலத்தி லழிவதாகிய சிற்றின்ப போகாதிகளைத் தவிர்த்து என்றமழியாப் பேரின்பத்தை விரும்புவதே அறிவறிந்த மக்கள் கடனும். நாம் எவ்வித அறிவுடையவராயிருப்பினும் "சுடர்விளக்காயினும் தூண்டுகோலொன்று வேண்டு" மென்பதுபோல், நாம் என்றும் மாறாத மோட்சசாம்ராச்சியமான நிரதிசயானந்தப் பேரின்பத்தை யடைவதற்குக் கல்வியே முக்கியமான பாதையா யிருக்கின்றது.

அறம்பொருளின் பமும்வீடும்பயக்கும் [புன்]
புறங்கடைநல்லிசையும்நாட்டும்-உறுங்கவலை
யாற்றுளியுங்கைகொடுக்கும்கல்வியினூங்கில்லைச்
சிற்றுயிர்க்குற்றதுணை.

என்னுஞ் செய்யுளின் சொற்பொருளால் கல்வியின பெருமை விபரிக்க முடியாததாயிருக்கின்றது. கல்வியினாலேயே சீரசுகம், நிறைந்த புத்தி, தருந்த செல்வம், மங்காப் புகழ், அழியாப் புண்ணியம் முதலியவை யுண்டாகின்றன. கல்வியானது ஏகாந்தத்திலின்பமும், சம்பாஷணையிற் சிறப்பும், காரியநிர்வாகத்தில்சாமர்த்தியமுமுண்டாக்குகின்றது. அது அஞ்ஞானமாகிய பிணிக்கு ஔஷதமாயு மிருக்கின்றது.

பிள்ளைகளின் கல்விக்குத் தந்தை தாயரே மூலகாரணர்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் மனமாகிய நிலத்தில் கல்வியாகிய விதையை விதைத்து பொய் சூது வஞ்சனை முதலிய களைகள் வளர்ந்து அதனைக் கெடுக்காவண்ணம் அவற்றை நீக்கி நெற்செய்கையாகிய கல்வியை வளர்க்கவேண்டும். அவர்கள் தங்கள் பிள்ளைகளை, நல்லொழுக்கமும் மெய்த்தேவபக்தியுமுள்ள வித்தியாசாலைகளில், "சிறுமையிற்கல்வி சிலையிலெழுத்து" "இளமையிற்கல்" என்னும் ஔவைப்பிராட்டியார் கூற்றுக்கிணங்கச் சிறுவயதிலேயே "ஊக்கமது கைவிடேல்" என்னும் முதுமொழிப் பிரகாரம் ஊக்கமுடையயோராகக் கற்கச் செய்யவேண்டும்

கல்வி கற்போர், தமது தந்தை, தாய், குரு முதலிய பெரியோர் தம்மை வருத்துவரென்னுமச்சத்துடனும், சோம்பலுடனும், அந்தந்த நேரங்களில் கற்கவேண்டியவற்றைப் பின் கற்கலாமென்று பின்போடுந் தன்மையுடனுங் கற்கின், ஊக்கமுடையவராகமாட்டார். கஜமானது போர்க்களத்திலம்பாற்றிண்டப்பட்டவிடத்தும், தளராது தன் பெருமையை நிலைநிறுத்துவதுபோல் ஊக்கமுடையாரும், தாம் கருதிய படிப்பிற்கு யாதேனுஞ் சிதைவு வந்தவிடத்தும், அதைப் பொருட்படுத்தாது தம் பெருமையை நிலைநிறுத்த வேண்டும்.

செய்புளிலக்கணங் கற்க விரும்பிய வொருவன், அதே சிந்தனையுரகக் கற்றுவருங்கால், தினமும் அவனுக்கு உணவுபடைத்த அன்னை, நெய்யூற்றுதற்கு மறதியாக, நிம்பக தைலத்தைத் தன் மைந்தனுணவிலூற்றியதாகவும். அவன் சிந்தனை முழுவதும் படிப்பிலேயேயிருந்தமையால், அவன் அத்தைலத்தின் கசப்பறியாது வழக்கப்படி யுண்டு சென்றனனென்றும், அன்னையும், தான் மறதியால் வேப்பநெய்யூற்றியதையும் மகன் படிப்பிற்கொண்ட ஊக்கத்தால் கைப்பறியாது அருந்திச் சென்றானென்பதையுந் தனக்குள் நிச்சயித்துக்கொண்டு, தன் மகனின் ஊக்கம் எவ்வளவு காலபரியந்தம் நிலைநிற்குமென்பதை யுணரும் வண்ணம், தினமும் அவனுண்டியில் நிம்பக தைலத்தையே பெய்துவந்தனளென்றும், இங்ஙனம் சில நாட் சென்றபின், மைந்தன் யாப்பிலக்கணங் கற்று முடிந்தவுடன், அவன் மனம் முன்னிருந்த நிலையை விட்டு மாறிற்றென்றும், அவன் வழக்கம்போலுணவருந்தும்போது "தாயே நெய் கசக்கின்றதே" யெனத் தாயுமதுகேட்டு, "மகனே இன்றுதானுன் படிப்புக் கசந்ததுபோலு" மெனப் பகர்ந்தனளென்றும், அன்னை தான் செய்துவந்ததைக் கூற, மகன் தான் படிப்பில் கவலை வைத்த விதத்தைக் கூறி மகிழ்ந்தன ரென்றுங் கூறப்பட்டிருக்குமிச் சிறு கதையால் ஊக்கமெத்துணைப் பெரிதென விளங்குகின்றது.

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னற்
குத், தன்றேசமல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச், சென்றவிடமெல்லாஞ் சிறப்பு."

என்றபடி அரசன் தன்னுடைய தேசத்தில் மதிக்கப்படுவானேயன்றிப் பிறதேசங்களில் மதிக்கப்படான். ஆனால் கல்வியறிவுள்ளவன் பிறதேசங்களில் அரசனைப் பார்க்கிலும் மேலாக மதிக்கப்படுவான். ஒருவனுக்குக் குலத்தினாலும், பணத்தினாலும் மேன்மையுண்டாகாது. கல்விப் பெருமையே மேன்மையுடைய தென்பதற்குக் கம்பருடைய சரித்திரமே தக்கவுதாரணமாகவிருக்கின்றது.

"கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு
மூன்றுவிழி
யெண்ணு விழி யேழாகு மீவோர்க்கு—
நண்ணு
மரந்தவத்தா லருள் ஞானம்
பெற்றோர்க்
கனந் தம்விழியென்றறி."

என்றபடி கல்வியானது ஒருவனுக்கு நன்மை தீமைகளை யுணர்த்துதலால் கண்ணையும் ஒக்கின்றது. படித்தவர்களுக்குக் கண்களிரண்டினோடு கல்வியையும் சேர்த்து மூன்றெனக் கூறுவர். படித்தவர்களுடன் கூடிய படியாதவர்களும், பூவுடன் கூடிய நாரும் நறுமணங் கமழுதல் போலவும், "சந்தனத்தைச் சார்தருவும் தக்க மணங் கமழுதல்" போலவும் கம்பர் கட்டுத் தறியுங் கவிசொல்லுமென்பதற்கிசைய, கல்வியறிவுடையோராகின்றனர்.

படித்தவர்கள் படியாதவர்களைப் போல் தங்கள் சுதேச வர்த்தமானங்களைத்தானு மறியாதிராது, பூமண்டலமெங்குஞ் சுற்றித் திரிகிறவர்களைப்போலப் பூலோக வர்த்தமானங்களையெல்லாம் பல பத்திரிகைகள் மூலமாயறிந்துகொள்ளுகிறார்கள். அவர்கள் பூர்வீக வித்துவான்களின் கிரந்தங் ளிலுள்ள நீதிகளையும் வேதாந்தங்களையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள் திருவள்ளுவர், ஔவையாரியற்றிய குறள், மூதுரை முதலிய நூல்களிலிருந்து சகல நீதிகளையும், கவி சிரேட்டராகிய கம்பரியற்றிய கம்பராமாயணம் முதலியவற்றிலிருந்து, சகல கற்பனைகளையும், தொன்னூல் முதலிய நூல்களிலிருந்தும் வேறு நூல்களிலிருந்தும் சகல நற்போதனைகளையுங் கற்றுக்கொள்ளுகின்றனர்.

ஆகையால், ஆண்களைப் போலவே பெண்களும் படிக்கவேண்டும். அவர்களும் பூவுலகில் கல்வியென்கிற ஞானாபரணத்தையணிந்து சன்மார்க்கத்தி லொழுகி, ஈற்றிலழியாப் பேரின்பவீட்டையடையும்வண்ணம் திருவருட் சமுகப் பெருங் கருணைப் பெரும்பதியாகிய இறைவனுடைய கிருபைபுரிவாராக.

ஐ. இ.
நல்லூர்.

## அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு கா. சி. ச. ராம. முத்துக்கிருஷ்ணநாயுடுவிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம். | தி. | ரூ. | ஊர் பெயர் | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 1924ஆ டிசம்பர்மீ | | | | |
| 1449 | 11 | 100 | வண்ணார்பண்ணை வேலுப்பிள்ளை சுந்தரம், | இமிட்டேசன் கற்கள் வைத்த டிம்மியுடன் பொன் கெட்டிப்பூரானட்டியல் 1 |
| 1456 | 13 | 50 | மானிப்பாய் கணபதிப்பிள்ளை செல்லையா, | பொன் பட்டணங்காப்பு சோடி 1 |
| 1463 | 13 | 50 | ,, கணபதியார் கந்தையா, | இமிட்டேசன கற்கள் வைத்த முகப்புடன் பொன் பீலிக்காப்பு 1 |
| 1478 | 18 | 22 | கன்னாதிட்டி ஆறுமுகம் ராஜேந்திரம், | பொன் புஞ்சு 1, இமிட்டேசன் கற்கள் வைத்த கவுத்தோர் 1 |
| 1487 | 20 | 50 | வெள்ளாந்தெரு அம்பலவாணர் கந்தையா, | பொன் டிம்மியுடன் ரம்பிப்பூரானட்டியல் 1 |
| 1488 | 20 | 130 | வண்கிழக்கு சுப்பையா ராமலிங்கம், | ஒற்றைக்கல் வைர மூக்குத்தி 1, உலாந்தா வைர ஐந்து கல் பூ மோதிரம் 1 |
| 1501 | 22 | 275 | அராலிதெற்கு ஆறுமுகம் செல்லத்துரை, | பொன் 2 தடையும் தாலியும் கோர்த்த தென்னம்பூ சங்கிலிக்கொடி 1 |
| 1507 | 24 | 55 | சுயினார்தீவு சின்னத்தம்பி பெரியதம்பி, | பொன் பட்டணங்காப்பு சோடி 1 |
| 1517 | 25 | 55 | கந்தர்மடம் வஸ்தியாம்பிள்ளை ஆசைமுத்து, | இமிட்டேசன் கற்கள் வைத்த டிம்பிபதக்கத்துடன் பொன் சங்கிலி அட்டியல் 1 |
| 1519 | 26 | 36 | நல்லூர் வல்லிபுரம் ஐயாத்துரை, | பொன் சங்கிலி அட்டியல் 1 |
| 1535 | 31 | 63 | மானிப்பாய் கந்தையா செல்லையா, | பொன் கெட்டித் தகட்டுக்காப்பு சோடி 1 |
| 1925ஆ ஜனவரிமீ | | | | |
| 1542 | 1 | 40 | கோண்டாவில் இராமுப்பிள்ளை மூத்ததம்பி, | பொன் சங்கிலி அட்டியல் 1 |
| 1546 | 2 | 20 | வண்ணார்பண்ணை வேலுப்பிள்ளை சுந்தரம், | பொன் நீலக்கல் மோதிரம் 1 சிகப்புக்கல் மோதிரம் 1 |
| 1555 | 5 | 57 | தாராக்குளத்தடி செல்லன் பெண் மாரிமுத்து, | பொன் பீலிக்காப்பு சோடி 1 |
| 1575 | 10 | 20 | இணுவில் கந்தையா சின்னத்துரை, | பொன் திருகில்லாத கைச்சங்கிலி 1 |
| 1582 | 11 | 20 | அச்செழு முருகேசு சுரயணமுத்து, | பொன் கெட்டிக்காப்பு சோடி 1 |
| 1583 | 12 | 75 | கொக்குவில் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை, | பொன கெட்டிக்காப்பு சோடி 1 |

விற்பனவு:— குரோதனவரு தைமீ 21உ (3-2-26) புதன்கிழமை காலை 10 மணியளவில் ஏடுபட்டவை பிறர்ங்களாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெர்திஸ்மேஸ்தர்.

(Mis 800)

## விளம்பரம்.

பாலைமரங்களும், தீராந்திகளும், முதிரை மரங்களும், தீராந்திகளும், பலகைகளும், கருங்காலி மரங்களும பனைமரங்களும், சிலாகைகளும் தேவைக்குத் தக்கபடி விற்பனைக்கிருக்கின்றது. ஆடர்களுக்கும் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், 17—12—25. (Mis. 777)

ச. கந்தையாபிள்ளை,
உவைமன் றோட்டு,
நல்லூர்.

## அழகான காலண்டர் இனம்!!

எங்கள் கம்பேனியில் கட்டி வெள்ளியால் செய்துள்ள நகைகளும் சாமான்களும் 1-ம் நெ, 2-ம் நெ, இரண்டு தினுசாக வேலை சுத்தமாய்ச் சொந்தத்தில் செய்த முரசு குத்தி கெங்காதரக்கொடிகளும், கைக்கோர்வை காஞ்சிக்கொடிகளும், கால் தண்டை, கொலுசு, கடயம், மயிர்மாட்டி, ஒட்டியாணம், பன்னீர்ச்சொம்பு முதலியவைகளும், கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம் முதலிய கல்நகைகளும், பஞ்சகலசகொப்பு சாதா மோதிரம், மூக்குத்திகள் மாட்டல் முதலிய பவுன் நகைகளும், சொந்தத்தில் தயார்செய்த தாழம்பூக்கரை முதலிய பலவித சேலைகளும், சரிகை பேட்டு, பட்டு பேட்டு போட்ட சோமன்களும், கலர் பட்டுலேஞ்சுகளும், உறுதியான பனியன்களும், தட்டார வேலைகளுக்கு வேண்டிய சீமை ஆயுதங்களும் தயாராய் இருக்கின்றன. தேவையானவர்கள் நமது விலாசத்திற்கு எழுதினால் விலைசராசமாய்ப்போட்டுள்ள கிரைய ஜாப்தா இலவசமாய் அனுப்புகிறோம்.

எங்கள் விலாசம்,
ஆ. மதுரைமுத்துபிள்ளை அண்டு கோ.,
ஷராப் அண்டு ஜவுளி வியாபாரம்
(Q. 68) தாதகாப்பட்டி, சேலம், S. I.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan, for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.